அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் : 01/03

எனது இல : ஈ/1/92/1/2003

அரசாங்க சேவை ஆணைக்குழு,
46, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

2003 செப்டெம்பர் மாதம் 12 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணசபை பிரதம செயலாளர்கள்
மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு

## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான தத்துவங்களின் கையளிப்பு

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சில விசேட தத்துவங்கள் மூலம் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ள 2003.07.02ஆந் திகதிய 1295/26ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு தங்களது அவதானத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றீர்கள். அதில் குறிப்பிடப்படாத ஏனைய சகல தத்துவங்களும், தொடர்ந்தும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமே இருக்கும்.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் சம்பந்தமான நிருவாக நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும் அதனால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கு அமைய செயற்படுத்துவதற்கு, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு இத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

I.

| தத்துவங்கள் கையளிப்பதன் கீழான சேவைகள்/அலுவலர்கள் | நிருவாக தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் |
|---|---|
| இலங்கை நிருவாக சேவை | பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை பொறியியலாளர் சேவை | பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை விஞ்ஞானவியல் சேவை | பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை கட்டிடக்கலை சேவை | பொது நிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை கணக்காளர் சேவை | திறைசேரி பிரதிச் செயலாளர் |
| இலங்கை திட்டமிடல் சேவை | திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை கல்வி நிருவாக சேவை | கல்வி என்னும் வியடத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| இலங்கை கமத்தொழில் சேவை | கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| | இலங்கை விலங்கின வேளாண்மை, சுகாதார சேவை | விலங்கின உற்பத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| | இலங்கை மருத்துவ சேவை | சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| | சுதேச மருத்துவ சேவை | சுதேச மருத்துவம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் |
| II. | அகில இலங்கை சேவைகள் எவற்றையும் சேராத பதவி நிலைத்தர அலுவலர்கள் | உரிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்கள் |
| III. | ஏதாவதொரு அமைச்சின் கீழ் வராத திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் பதவி நிலைத் தர அதிகாரிகள் | உரிய திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவர் |

03. தங்களது விடயங்களுக்குக் கீழ்வரும் சேவைப் பிரமாணங்கள் பொருத்தமானவாறு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர்களும், ஏதேனும் அமைச்சின் கீழ் வராத திணைக்கள, நிறுவனத் தலைவர்களும் பணிக்கப்படுகிறார்கள்

04. இலங்கை கணக்காளர் சேவை சம்பந்தமாக திறைசேரி பிரதிச் செயலாளர், அமைச்சின் செயலாளர்களின் கீழ் உட்சேர்க்கப்படல் வேண்டும்.

05. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் புதிய சட்டங்கள் மற்றும் கட்டளைகள் உருவாக்கப்படும்வரை நியமித்தல், உயர்வு செய்தல் மற்றும் ஒழுக்காற்று நிருவாகம் தொடர்பாக நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் செல்லுபடியாதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய

HDLGoonewardena

எச்.டி.எல்.குனவர்தன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.